இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 278 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 05 – திங்கள்கிழமை 19 மே 2025 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 278 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 05 - Monday 19 May 2025 - Madurai 12 Pages ₹ 5.00

## கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வரும் வரை போராட்டம் தொடரும்!

# மாநில மொழிகளை அழிக்கவே தேசிய கல்விக் கொள்கை!

## பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எழுதிய “தேசிய கல்விக் கொள்கை – 2020 எனும் மதயானை” நூலை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டு உரை!

**சென்னை, மே 19 -**

**பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எழுதிய “தேசிய கல்விக் கொள்கை 2020 எனும் மத யானை நூலினை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு உரையாற்றுகையில், “கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வரும் வரை போராட்டம் தொடரும்” எனவும் தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளை அழிக்கவே தேசிய கல்விக் கொள்கை கொண்டுவரப்படுகிறது எனவும் குறிப்பிட்டார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.05.2025) சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் எழுதிய “தேசிய கல்விக் கொள்கை 2020 எனும் மதயானை” நூலினை வெளியிட்டு ஆற்றிய உரை வருமாறு:-

இது, புத்தக வெளியீட்டு விழாவா? இல்லை, உரிமைக் குரல் எழுப்பும் கூட்டமா? என்று கேட்க தோன்றும் அளவிற்கு உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் கோபாலா கவுடா அவர்கள் ஆற்றிய உரையாக இருந்தாலும் சரி, முன்னாள் முதல்வர் திக்விஜய சிங் உரையாக இருந்தாலும், முன்னாள் இஸ்ரோ தலைவர் மயில்சாமி அண்ணாதுரை அவர்களாக இருந்தாலும் மிகச் சிறப்பாக உரையாற்றிருக்கிறார்கள். முதலில் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.5.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எழுதிய "தேசிய கல்விக் கொள்கை 2020 எனும் மதயானை" நூலினை வெளியிட்டு உரையாற்றினார். இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, மத்தியப்பிரதேச மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் – நாடாளுமன்ற கல்வி நிலைக்குழுத் தலைவர் திக்விஜய சிங், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி., தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா, தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் – சட்டமன்ற உறுப்பினர் தி.வேல்முருகன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் காதர் மொய்தீன், கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ஈஸ்வரன் எம்.எல்.ஏ., மக்கள் நீதி மய்யத்தின் பொதுச் செயலாளர் அருணாச்சலம் உள்ளிட்ட தோழமைக் கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உச்சநீதிமன்ற மேனாள் நீதிபதி கோபால கவுடா, இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் மேனாள் இயக்குநர் டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை, இந்து குழுமத்தின் இயக்குநர் ‘இந்து’ என்.ராம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வாரியத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

### அன்பில் - அறிவில் - ஆற்றலில் என்ற வரிசையில் இப்போது எழுத்திலும் வெற்றி பெற்றிருக்கிறார் தம்பி மகேஸ்!

**ஒரு தாயின் மகிழ்ச்சி மனநிலையில் நான் இருக்கிறேன்!**

இந்த விழாவை பொறுத்தவரை, என்னுடைய மனநிலை தாலாட்டி வளர்த்த மகனுக்குப் பாராட்டு கிடைக்கும்போது, ஒரு தாய் எப்படி மகிழ்ச்சி அடைவாளோ, அதே மனநிலையில் நான் இருக்கிறேன். ஏனென்றால், என் நண்பன் பெற்றெடுத்த மகேஸ் அந்த உணர்வை எனக்கு ஏற்படுத்தி தந்திருக்கிறார்!

உதயாவும் மகேசும் என் கண் முன்னால் வளர்ந்த பிள்ளைகள்! இன்றைக்கு எல்லோரும் பாராட்டுகின்ற வகையில் சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள்! இதை பார்க்கின்றபோது அளவில்லா மகிழ்ச்சியும், பெருமையும் எனக்கு ஏற்படுகிறது! ஏனென்றால், எங்களுடைய குடும்பத்துக்கும், அன்பில் குடும்பத்திற்குமான நட்பு என்பது மூன்று தலைமுறையான நட்பு! தலைவர் கலைஞர் அன்பில் தர்மலிங்கம்! நான் அன்பில் பொய்யாமொழி! உதயநிதி அன்பில் மகேஸ் பொய்யாமொழி என்று இந்த நட்பு தொடருகிறது! இப்போது பொய்யாமொழியை நினைத்தா லும் எனக்கு கண்ணீர் வரும், எப்போது நினைத்தாலும் கண்ணீர் வரும்.

**குடும்ப பாச உணர்வோடு பொய்யாமொழியின் இடத்திலிருந்து அன்பில் மகேஸை வாழ்த்துகிறேன்!**

1999 நாடாளுமன்றத் தேர்தல் நேரம்! திருச்சியில் நடந்த தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றிக் கொண்டு இருந்த மேடையில் இருந்த நம்முடைய அன்பில் பொய்யாமொழி சிரித்துக் கொண்டே உட்கார்ந்து கொண்டிருந்தார். ஆனால், இரவு விடியதிற்குள்ளாக எங்கள் எல்லோரையும் அழ வைத்துவிட்டு போய்விட்டான்! அப்போது, நான் தேனியில் பரப்புரையில் ஈடுபட்டிருந்தேன். இடியாக வந்திறங்கிய செய்தியை கேட்டதும் துடியாக துடித்து போய், திருச்சிக்கு ஓடோடி வந்தேன். என் நண்பனுடைய உடலில் சாய்ந்து நான் கதறி அழுதேன்... அன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் வெளியிட்ட இரங்கல் அறிக்கையில், “என் பிள்ளைகளில் ஒருவரை இழந்துவிட்டேன்” என்று எழுதினார். இதுதான் எங்களுடைய நட்பின் ஆழம்!

இந்தக் குடும்ப பாச உணர்வோடு, பொய்யாமொழியின் இடத்தில் இருந்து நூலாசிரியர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியை வாழ்த்துகிறேன்! பாராட்டுகிறேன்!

அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில், பள்ளிக்கல்வித் துறை அடைந்திருக்கின்ற உயரங்களை பார்க்கிறேன். செய்திருக்கின்ற சாதனைகளை பட்டியலிட்டு மட்டும் நான் சொல்லவேண்டும் என்றால், இல்லம் தேடிக் கல்வி மாணவர் மனசு எண்ணும் எழுத்தும் வாசிப்பு இயக்கம் நம்ம பள்ளி நம்ம ஊரு - வானவில் மன்றம் மணற்கேணி செயலி கோடைக் கொண்டாட்டம் கலைத் திருவிழா தகைசால் பள்ளிகள் மாதிரி பள்ளிகள் ஸ்மார்ட் வகுப்பறைகள்! ஹைடெக் லேப்கள்! அதுமட்டுமல்ல, மாவட்டந்தோறும் புத்தகத் திருவிழாக்கள்! பன்னாட்டு புத்தகத் திருவிழாக்கள்! சாரண சாரணியர் இயக்கத்தின் உலக மாநாடு! ஆசிரியர்களுக்கு டேப்! அரசுப் பள்ளி மாணவர்களையும், ஆசிரியர்களையும் வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்று ஊக்கப்படுத்துவது, இதுவரையில் யாரும் செய்யாத 234 தொகுதிகளிலும் பள்ளிக்கூடங்களை ஆய்வு செய்த ஒரே அமைச்சர் நம்முடைய தம்பி அன்பில் மகேஸ் அவர்கள்.

**பள்ளிக் கல்வித் துறையின் பொற்காலமாக மாற்றிய மகேஸ்!**

ஆண்டுதோரும் பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி விகிதம், அதற்கு முந்தைய ஆண்டைவிட அதிகரிப்பு! இடைநிற்றல் இருக்கக் கூடாது என்று மாணவர்களை திரும்ப கல்விச் சாலைகளை நோக்கி அவர் அழைத்துக் கொண்டு வருவது. பள்ளிக்கல்வித் துறையின் பொற்காலமாக நம்முடைய திராவிட மாடலை மாற்றியிருக்கிறார் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள்!

இந்த சாதனைகளை எடுத்து சொல்வதோடு மட்டுமல்லாமல், ஒன்றிய பா.ஜ.க. அரசால், தமிழ்நாடு எதிர்கொண்டிருக்கின்ற நெருக்கடிகளையும், நம்முடைய அரசியல் ரீதியாக அவர்கள் பழிவாங்கிக் கொண்டு இருப்பதை எடுத்துச் சொல்லக்கூடிய

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### எனக்குப் பெருமையும் - மகிழ்ச்சியும்!



**உதயாவும், மகேசும் என் கண் முன்னால் வளர்ந்த பிள்ளைகள்! இன்றைக்கு எல்லோரும் பாராட்டுகின்ற வகையில் சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள்! இதை பார்க்கின்றபோது அளவில்லா மகிழ்ச்சியும், பெருமையும் எனக்கு ஏற்படுகிறது! ஏனென்றால், எங்களுடைய குடும்பத்துக்கும், அன்பில் குடும்பத்திற்குமான நட்பு என்பது மூன்று தலைமுறையான நட்பு! தலைவர் கலைஞர் அன்பில் தர்மலிங்கம்! நான் அன்பில் பொய்யாமொழி! உதயநிதி அன்பில் மகேஸ் பொய்யாமொழி என்று இந்த நட்பு தொடருகிறது! இப்போது பொய்யாமொழியை நினைத்தாலும் எனக்கு கண்ணீர் வரும், எப்போது நினைத்தாலும் கண்ணீர் வரும்.**

---

## குடியரசுத் தலைவர் உச்சநீதிமன்றத்திற்கு அனுப்பிய குறிப்பினை; கூட்டாட்சி – மாநில சுயாட்சியை பாதுகாக்க உறுதிபூண்டுள்ள

# அனைத்து மாநில அரசுகளும் எதிர்க்க வேண்டும்!

## 8 மாநில முதலமைச்சர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, மே 19 -**

**குடியரசுத் தலைவர் அவர்கள் உச்சநீதிமன்றத்திற்கு அனுப்பிய குறிப்பினை, இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பு மற்றும் மாநில சுயாட்சியைப் பாதுகாக்க உறுதிபூண்டுள்ள அனைத்து மாநில அரசுகளும் எதிர்க்க வேண்டுமென்றும், நீதிமன்றத்தின் முன் ஒரு ஒருங்கிணைந்த சட்ட உத்தியை உருவாக்கி, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்பைப் பாதுகாத்திட முன்வர வேண்டுமென்றும் வலியுறுத்தி, பா.ஜ.க. அல்லாத 8 மாநில முதலமைச்சர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், உச்சநீதிமன்றத்திற்கு குறிப்பு ஒன்றினை அனுப்பிவைத்துள்ள நிலையில், நேற்று முன்தினம் (17.5.2025) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மேற்கு வங்காளம், கர்நாடகா, இமாச்சல் பிரதேசம், தெலங்கானா, கேரளா, ஜார்கண்ட், பஞ்சாப், ஜம்முகாஷ்மீர் ஆகிய 8 மாநில முதலமைச்சர்களுக்கு கடிதம் ஒன்றினை எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள், ஒன்றிய அரசின் ஆலோசனையின் பேரில், கடந்த 13.5.2025 அன்று இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 143 பிரிவின்கீழ், சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி உச்சநீதிமன்றத்தின் முன் 14 கேள்விகளை எழுப்பி குறிப்பு ஒன்றினை அனுப்பியது தாங்கள் அறிந்த ஒன்று என்றும், இந்தக் குறிப்பு எந்த மாநிலத்தையும் அல்லது தீர்ப்பையும் குறிப்பாகக் குறிப்பிடவில்லை என்றாலும், தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு எதிராக தொடர்ந்த வழக்கில், சட்டம் மற்றும் அரசியலமைப்பின் விளக்கம் குறித்து உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினைக் கேள்விக்குள்ளாக்குவதே இதன் நோக்கம் என்றும் தெரிவித்துள்ளார்.

தனது அரசாங்கத்தால் பெறப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு, தமிழ்நாட்டிற்கு மட்டுமல்லாமல் அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும் என்பதைக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இது மாநிலங்களுக்கும், ஒன்றிய அரசுக்கும் இடையிலான கூட்டாட்சி அமைப்பையும், அதிகாரப் பகிர்வையும் நிலைநிறுத்துவதாக அமைந்துள்ளது என்றும், இதனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில சட்டமன்றங்களால் இயற்றப்படும் சட்டங்கள், ஒன்றிய அரசால்

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்